பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a Newspaper in Sri Lanka.

03 MAR 2001

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1539)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 19 சனிக்கிழமை (3-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 73

## புலிகளை பிரிட்டன் தடைசெய்ததையிட்டு சிங்கள மக்கள் மகிழ்ச்சிகொள்ளக் கூடாது!

### செய்தியாளர் மாநாட்டில் லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருப்பது சமாதான முயற்சிகளை எந்த வகையிலும் பாதிக்க மாட்டாது.

புலிகளை பிரித்தானியா பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்ததை யிட்டு சிங்களமக்கள் மகிழ்ச்சி கொள்ளவோ, ஆரவாரம் செய்து ஓர் இனத்தைத் தாழ்த்தவோ கூடாது

இவ்வாறு வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை விதித்திருப்பது சமாதானத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். விடுதலைப் புலிகள் தடைசெய்யப் பட்டிருப்பதனால், தமிழ் மக்கள் தோற்றுப்போய் விட்டதாகவோ அல்லது பின்னடைவைச் சந்திப்பதாகவோ கருதக்கூடாது.

சமாதானப் பேச்சுக்கள் எந்நேரத்திலும் ஆரம்பிக்கப் படலாம்அதற்கானகாலத்தை தான் திட்டவட்டமாகக் கூற

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கதிர்காமர் மறுப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் அரசுக்கு நன்றி தெரிவிப்பதற்காக பிரித்தானியாவுக்கு செல்லவிருப்பதாக வெளியான செய்திகளை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மறுத்துள்ளார்

## நல்லெண்ணக் குழு கண்டனம

விடுதலைப் புலிகளை வன்னியில் வைத்து அரசபடைகள் தாக்கிய சம்பவத்தை சமாதான தேசிய நல்லெண்ணக் குழு நேற்றுக் கண்டித்து அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளது. (வ)

## ★ சமாதானப் பேச்சிற்கு உரமூட்ட

# அரச முக்கியஸ்தர்களை வன்னிக்கு அழைத்துச்செல்ல ஆயர்கள் முயற்சி

### அமைச்சர் தினேஸுடன் ஆலோசனை

(நமது நிருபர்)

**இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இன மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் ,தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கியஸ்தர்களை வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கு யாழ். மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்.**

மக்கள் ஐக்கியமுன்னணியின் தலைவரும்அமைச்சருமான தினேஷ்குணவர்த்தனாவைச்சந்தித்த அவர்கள்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

ஆயர்களுக்கும், அமைச்சர் தினேஷ்குணவர்த்தனாவுக்குமிடையிலான இச்சந்திப்பு நேற்றுசுமார் இரண்டுமணி நேரம் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண இராசப்பு யோசப் அமைச்சர் தினேஷ்குணவர்த்தனாவிடம் எடுத்துக்கூறுகையில் தெரிவித்திருப்பதாவது.

நீண்டகாலமாக இடம் பெற்றுவரும் இனமோதல்களைமுடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கிலேயே ஆயர்கள் ஆகியநாம் செயற்பட்டுவருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்,இலங்கைஅரசுக்கும் இடையில் நோர்வேமேற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் வீடுகளை ஊடறுத்து புதிய பாதை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் உள்ள இராணுவக் காவல்அரணுக்கு அண்மித்த பகுதியூடாக தெல்லிப்பபழை புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு புதிய பாதை ஒன்று போடப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு தற்பொழுது புதிதாகப் போடப்பட்டு வரும் பாதைக்கு அருகாமையில் இரண்டு ஒழுங்கைகள் இருந்தபோதும் வீடுகளையும், வளவுகளையும் புல்டோசர்மூலம் ஊடறுத்துப் புதிய பாதை போடப்பட்டு வருவது மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## திங்களன்று கூடிஆராய்வர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை பிரித்தானியா தடை செய்திருப்பதை அடுத்துஎழுந்துள்ள நிலைமைகளை ஆராய பத்து தமிழ்க்கட்சிகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் கூடவுள்ளனர். (வ)

## பண்ணைப் பாலத்தில் தீவிர சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணைப் பாதையூடாக பிரயாணம் செய்யும பயணிகள் மீதான சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் தீவிரப் படுத்தியுள்ளனர்.

பண்ணைப்பாலத்தில் முன்னர் தளர்த்தப் பட்டிருந்த சோதனை மீண்டும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அல்லைப்பிட்டியில் உள்ள இராணுவசோதனைச்சாவடியில் தனியார், இ.போ.சபை பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்வோர் இறக்கப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (வ)

## சுகாதாரப்பகுதி விவகாரம் சுமுகமாக முடிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மேற்கொண்ட கறுப்புப்பட்டிப் போராட்டம் நேற்று சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ் முதல்வர், கூட்டணியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட சுமுகமான நடவடிக்கைகளால் வைத்திய கலாநிதி இ தெய்வேந்திரன் தொடர்ந்தும் தனது சேவையை வழங்க இணங்கியதை அடுத்தே சுமுக நிலை ஏற்பட்டுள்ளது. (ந)

## பிரிட்டன் தடைச்சட்டத்தால் தஞ்சமடைவோர் பாதிப்பு

(கொழும்பு)

பிரிட்டனில் அமுலுக்கு வந்துள்ள பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் அந்த நாட்டில் அரசியல் தஞ்சம்கோருவோரையும் பாரதுரமாகப் பாதிக்கும் என்றும் பிரிட்டன் தூதரக வட்டாரங்கள நேற்றுத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள், அல்லது அவர்களது ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கையல் தேடப்பட்டு வருவோர் ஏற்கனவே பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரி அங்கு வசித்துவருகின்றனர். பயங்கரவாதத்தடைச் சட்டம் அங்குஅமுலுக்கு வந்திருப்பதனால் அவர்களின் நிலை கஷ்டமானதாக இருக்கலாம் என்பதுடன் புதிதாக எவரும் இலங்கையில் இருந்து அரசியல் தஞ்சம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையின்

# விளம்பரங்களை "வலம்புரிக்கு" வழங்கக்கூடாது கௌரவ முதல்வர் ரவிராஜ் கடும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் விளம்பரங்களை வலம்புரிப் பத்திரிகைக்கு வழங்கக் கூடாதென யாழ். மாநகர சபையின் முதல்வர் என். ரவிராஜ் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய தினம் நடந்த யாழ். மாநகர சபையின் விஷேட கூட்டத்திலேயே இவ் உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக யாழ்.மாநகர சபை விவகாரங்கள் பற்றி வலம்புரி செய்தி வெளியிட்டதை அடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், வலம்புரி பத்திரிகை பகிரங்க மன்னிப்புக் கோரினால் மட்டுமே விளம்பரம் வழங்கப் படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு:**

சிறுவர்கள் இருட்டைக் கண்டு பயப்படுவார்கள், ஆனால் இங்கோ பெரியவர்கள் ( ? ) ஒளியைக் கண்டு அஞ்சுகிறார்கள். எதற்கும் பொறுத்திருந்துபார்ப்போம்: ஆனால் அதுவரை ஒரு பழமொழியை மட்டும் இங்கு தரவிரும்புகிறோம்;

**'பறட்டைக் காட்டிற்கு கறட்டிஓணான் பஞ்சவர்ணக் கிளி'** ஆ அதுவே நிஜம்.

(ஆ-ர்)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டீ. பிறிச் புதியது நீளம் 5½அடி, அகலம் 2½அடி உள்ளே சில்லர் தட்டினால் ஆனது விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: லிங்கம் தொலைத் தொடர்பு மானிப்பாய் வீதி, தாவடி. T. P. 2690

(2568)


## படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் அடுத்ததாக ஷியாம் பெனகலின் மந்தான் எனும் குஜராத் தலித் மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் திரைப்படம் இன்று மு. ப. 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படும்.

(உ)

## இராசி பலன்

மாசி 19 சனி

அட்டமி பி.ப. 2.56 வரை

ரோகினி ந.ப. 12.00 வரை

இராகு காலம் 9.27 – 10.57

சுப நேரம் 3.27–4.57

அமிர்த சித்தம்

**மேடம்**
பிரயாணம், தெய்வ அனுகூலம், உறவினர் சந்திப்பு.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு. காரியத்தடை, பொருள் வரவு.

**மிதுனம்**
இடமாற்றம், மனக்கிலேசம், பொருள் வரவு, பிரயாணம்.

**கடகம்**
சென்ற இடத்தில் சிறப்பு, கடவுள் நம்பிக்கை, மன அமைதி.

**சிங்கம்**
பொருள் சேர்தல், மனப் பதற்றம், அலைச்சல்.

**கன்னி**
மனக் கவலை. உடல்ச் சோர்வு, பிரச்சினைகள் அதிகரித்தல்.

**துலாம்**
நண்பர்கள் சந்திப்பு, காரியம் வெற்றி, போசன சுகம்.

**விருச்சிகம்**
காரிய ஜெயம், முயற்சி கை கூடும், மன மகிழ்ச்சி.

**தனுசு**
பண வரவு, உறவினர் சந்திப்பு, முயற்சி ஜெயம்.

**மகரம்**
காரிய சித்தி, தூரப் பிரயாணம், மனத்திருப்தி.

**கும்பம்**
உடல் நலம், உறவினர் வருகை, தனலாபம்.

**மீனம்**
மனக் குழப்பம். தெய்வ வழிபாடு. காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப் பிடப்பட்டது.)

வளவன்

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் இளைஞர் கழக அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு கிராம அலுவலர் எஸ்.தயாபரன் தலைமையில் நடைபெறும்.

[இ-5]

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலையின் தடகளவிளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் மு.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

★ ★ ★ [ந]

(நெடுந்தீவு)

சிறுவர் உளநல சமூக மேம்பாட்டை விருத்தி செய்யும் முகமாக இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு மேற்கு பழனிபாபுகல்விநிலையத்தில் கலந்துரையாடல் இடம்பெறும்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இடம் பெறவுள்ள இக் கலந்துரையாடலுக்கு வலி வடக்குபிரதேச சபைத்தலைவர் திருமதிபா. ஸ்ரீபாஸ்கரன் தலைமை தாங்கவுள்ளார்.

யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர்கள் எஸ். சிவமகாராசா, மாவை சேனாதிராசா ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

இதில் சுகவாழ்வு நிறுவனத்தைச்சேர்ந்த கோ. யோகேஸ்வரன், எம் மதியழகன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (ந-5-82)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு |
|---|---|---|
| 19 ↓ 04 ↓ 1922 | | 13 ↓ 03 ↓ 2000 |

அமரர்

### தம்பாபிள்ளை சிவசம்பு

திதி 03-03-2001

பாரினில் புகழ் ஓங்க மாண்புடன் வாழ்ந்த
என் அன்புத் தெய்வமே
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு
சென்றாலும் துயரம் ஆறாது


இங்கனம்

எச்சாட்டிவைரவர்கோவிலடி, சுதுமலை தெற்கு, சுதுமலை.

பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமக்கள்
பேரப்பிள்ளைகள்

(கி/1552)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னையா நல்லையா

(6ம் வட்டாரம் மண்டைதீவு)

தோற்றம்: 01 – 01 – 1922

மறைவு: 23 – 02 – 1999

திதி: 03 - 03 - 2001
(அட்டமி பூர்வபட்சம்)

விழி ஓரம் ஓடுகின்ற கண்ணீர்
விதியென்று சொன்னாலும் நிற்கா!
விம்பத்தில் தெரிகின்ற காட்சி
விந்தை உலகில் விசித்திரமையா!
இனி எப்போ காண்போமென்று
சிந்தையில் ஒருகணம் கொண்டால்
நொருங்குண்ட இதயமாய்,
ஓ ஐயனே பெறுக சாந்தி!

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1554)

இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேசம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறை கூல்எயர் மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் 06 03. 2001 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை யாழ் குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். காங்கேசன்துறை கூல்எயர் மின் நிலையத்தில் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பதாக மின்வழங்கப்படும் என்பதையும் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

இதன் காரணமாக மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம்வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ் பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(கி-1551)


## வலி.கிழக்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் கணனிப் பயிற்சி

எமது 15- 02 -2001 திகதிய விளம்பரத்திற்கு மேலாக

MS EXCEL
MS WORD
MS ACCESS
} 3 months

**மேற்படி பாடவிதானங்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும். இம்மூன்று பாடவிதானங்களுக்கும் கட்டணம் ரூபா 2000 மட்டுமே**

**மாணவர்களே இவ் அரியசந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி 13-03-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

குறிப்பு:- செய்முறை பயிற்சிக்கு அதிக நேரம் வழங்கப்படும்.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.

திரு. பூ. குணசிங்கம்
ஜே. பி. யூ. எம்
தவிசாளர்.

(கி-1553)

# முன்பள்ளிகளின் விருத்தி கருதி
# குடும்ப கட்டமைப்பு உருவாக்கம்

## வடமராட்சியில் நடைமுறை

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளில், முன்பள்ளி குடும்ப கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் பணிகளை சம்பந்தப்பட்ட பிரிவு ஆரம்ப பிள்ளைப் பருவம் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் மேற்கொண்டு வருகிறார்.

முன்பள்ளி தொடர்பான வேலைத்திட்டங்களை இலகுபடுத்தி, திட்டங்களை துரிதமாக மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு மேற்படி கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் பிரகாரம், மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி ஒரு முன்பள்ளி குடும்ப அமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கு தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

மூன்று குடும்ப அமைப்புக்கு பொறுப்பாக கோட்ட இணைப்பாளர் செயற்படுவார். கோட்ட இணைப்பாளர்களுக்கு வலய இணைப்பாளர் இருவர் பொறுப்பாக இருப்பர்.

இவை அனைத்திற்கும் பொறுப்பாக வலய ஆரம்ப பிள்ளை பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

இவை அனைத்து கட்டமைப்பிலும் உள்ளவர்கள் சேவை நோக்குடன் கடமையாற்றுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## பொது ஜ. ஐ. மு. யின் ஆட்சி கவிழும் என ஐ. தே. க. கனவு காணுகின்றது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி, இன்னும் ஆறு மாதகாலத்திற்குள் கவிழ்ந்து விடும் என ஐ.தே.கட்சி கனவு காணுகின்றது.

இவ்வாறு திட்ட அமுலாக்கல் அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரரணதுங்கவின் தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணி இன்னும் பதினெட்டு வருடகாலம் ஆட்சி புரிந்தே தீரும்.

பலாங்கொடையிலுள்ள சிங்கள தேசிய பாடசாலை நிகழ்வொன்றில் உரையாற்றிய போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

[செ]

## மாசிமாத உலர்உணவு நிவாரணம் விரைவில்

(ஆவரங்கால்)

தமது பிரிவுக்குட்பட்டவர்களுக்கான மாசிமாத உலர் உணவு நிவாரணம் இம்மாதம் 10 ஆம் திகதிக்கிடையில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டு வருவதாக வலிகிழக்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கேற்ற வகையில் உணவுப்பொருட்கள் ப.நோ. கூ. ச. கிளைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும்,

நிவாரண மீளாய்வைக் கருத்திற்கொள்ளாது, அதற்குமுன்பு வழங்கப்பட்ட அனைவருக்கும் பட்டியலின் பிரகாரம் நிவாரணம் வழகப்படும்எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(உ-57)

## விபத்தில் சிக்கியவர் ஸ்தலத்திலே பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த புதனன்று கோப்பாய் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்தில் சிக்கிய ஒருவர் ஸ்தலத்திலேயேபலியானார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த நடராஜா தவராஜலிங்கம் (வயது-63 என்பவரே பலியானவராவார்.

மரண விசாரணைகளின் பின், சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(உ-2,6,10)

## விஷம் கலந்தநீர் அருந்தி 110 யுவதிகள் சுகவீனம்

சொழும்பு சட்டுப்பத்தையிலுள்ள தனியார் தொழிற்சாலையொன்றில் பணியாற்றிய நூற்றிப்பத்து யுவதிகளும் திடீரென கடும் சுகவீனத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அவசர கிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மதிய உணவு உட்கொண்டதன்பின்னரேசுகவீனத்திற்குள்ளாகியுள்ளனர்.

எனவே இவர்கள் உட்கொண்ட உணவில் அல்லது நீரில் நஞ்சு கலக்கப்பட்டிருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் அதிகமானோர் தலைவலி வயிற்றுவலி, வயிற்றோட்டம், கைகால்நடுக்கம், உடல்பதட்டம் அதிர்ச்சி ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

(செ)

## ஆங்கிலப் படிப்புகள் வட்ட மூன்றாவதுஅமர்வு நாளை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஆங்கிலப் படிப்புகள் வட்டத்தினரின் மூன்றாவது அமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆங்கில மொழி கற்பித்தலில் தொடர்பாடல் அணுகுமுறை என்றஆய்வு அன்றைய அமர்வில் இடம்பெறும்.

இதில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கலாநிதி சபா ஜெயராசா நடத்தை வாதம் எனும் தலைப்பிலும் யாழ். பல்கலைக்கழக ஆங்கிலமொழித் தலைவர் திருமதி சாந்தி விக்னராஜாசிந்தனைவாதம் எனும் தலைப்பிலும் தமது ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

(உ-59)

## இலவச வைத்திய முகாம்

[யாழ்ப்பாணம்]

தீவக லயன்ஸ் கழகத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு மகாவித்தியாலயத்தில், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனைகள், வைத்திய ஆலோசனைகள் மற்றும் மருந்து வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன

மு. ப. 9 மணி தொடக்கம் பி. ப. 2 மணி வரை இடம் பெறவுள்ள இலவ வைத்திய முகாமில் வைத்தியர்கள் மற்றும் யா/பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் வைத்திய சேவைகளையும் வழங்குவர்.

(உ)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்/மறைமாவட்டசமூகத் தொடர்புசாதன ஆணைக்குழு நடத்தும், ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம் பயிற்சிப் பட்டறை நிகழ்வில் இன்று காலை 9 மணிக்கு தொடக்கவுரையைத் தொடர்ந்து,

வீடியோ படப்பிடிப்புப் பயிற்சி பத்திரிகையாக்கப் பயிற்சி என்பனவும்; 'சமூகத் தொடர்பாடலில் கணனித் துறை, என்னும் தலைப்பில் 'மைக்ரோவின்' தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் எஸ். நாகநந்தன் கருத்துரை வழங்கவுள்ளார்.

(செ)

## ஞாபகார்த்த உரை

[யாழ்ப்பாணம்]

தவில் மாமேதை கைதடிப் பழனிமலையின் ஞாபகார்த்தவுரை வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பி ப. 2 மணிக்கு ஏழாலையில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

இந்து சமயப் பேரவை உப தலைவர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் யா/பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் ந.வி.மு. நவரத்தினம் ஞாபகார்த்தவுரையை நிகழ்த்துவார்.

[உ]

## பயன்மிகு கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

கியுடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் அதன் விழிப்புணர்வுக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் பரவலாக சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்திவருகின்றனர்.

இதில் குடிபோதைதவிர்ப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முக்கியமாய் இடம்பெற்று வருகிறது.

பொலிகண்டி, இன்பருட்டி, சக்கோட்டை, கரவெட்டி, இராஜகிராமம் போன்றபகுதிகளில் அண்மையில் நடாத்தப்பட்ட மதுபோதை தவிர்ப்பு விழிப்புக் கருத்தரங்குகளில் பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி பயனடைந்துள்ளனர்.

(உ-59)

# சங்கே முழங்கு

## கல்வித்திணைக்களத்தினர் கவனம் எடுப்பார்களா?

யாழ்மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் வலைப்பந்தாட்ட போட்டி நிகழ்வுகளில் நகரப்புற கல்லூரிகளே தம் செல்வாக்கை செலுத்தி ஆதிக்கம் புரிந்தமை யாவரும் அறிந்ததே.

ஆனால் மிக அண்மைக் காலத்தில் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட நிகழ்வுகளில் வெற்றி, தோல்விகளை நிர்ணயிக்கும் சக்தியாக கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ச்சி அடைந்துள்ளமை கண்கூடு.

தற்போது கோட்ட மட்டத்தில் இப்போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று பரிசு வழங்கும் நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. போட்டிகளில் பங்குகொண்ட பிள்ளைகள் பரிசு பெறுவது மகிழ்ச்சிக்குரியதே. இதே போன்று வலயமட்டத்திலும் போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கும் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறும் என்பது திண்ணம்.

ஆனால் மாவட்ட ரீதியில் இடம்பெறும் போட்டிகள் நடத்தப்பட்டும், பரிசு வழங்கும் நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. மாவட்ட ரீதியில் நடைபெறும் 19, 17, 15 வயதுப் போட்டிகளில் கூடுதலான 1 ஆம், 2 ஆம் இடங்களை கிராமப்புறப் பாடசாலைகளே பெற்றுக் கொள்கின்றன. இவ்வெற்றிகளை ஜீரணிக்க முடியாத யாழ் விளையாட்டுப் பகுதியில் பணிப்பாளர்களாக விளங்கும் ஒரு சில அதிகாரிகள் பரிசு பெறும் கிராமப்புற பாடசாலைகளை கௌரவிக்க முன் வருவதில்லை

ஒவ்வொரு பிரிவிலும் மாவட்ட ரீதியில் 1 ஆம், 2ஆம் இடங்களைப் பெறும் பாடசாலைகள் வடக்கு - கிழக்கு மாகாணப் போட்டிகளில் பங்குபெற தகுதி பெறுகின்றன.

தற்கால போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவும் நிதிப்பிரச்சினை காரணமாகவும் பல பாடசாலைகள் மாகாண வலய போட்டிகளில் பங்குகொள்ள திருகோணமலை செல்லும் வாய்ப்புக்களை இழக்கின்றன.

2000 ஆண்டில் இது போன்ற காரணத்தால் பல பாடசாலைகள் மாகாணப் போட்டிகளில் பங்குபெற முடியவில்லை?. இது விளையாட்டில் பங்குகொண்ட பிள்ளைகளுக்கு ஏமாற்றமே.

இதைத்தவிர்க்க மாவட்ட ரீதியில் போட்டிகளில் வெற்றிபெறும் பாடசாலைகளுக்கு போட்டி இறுதிப் பரிசு அளிப்பு விழா நடாத்தினால் பெருமை பெறுவது மாணவிகள் மட்டுமல்ல, கல்வித்திணைக்களமுமே அத்துடன் கல்வித்திணைக்களம் போட்டிகளுக்கு நிதி உதவி செய்து பிள்ளைகளை கௌரவிக்க முன்வருமா, திணைக்கள உயரதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுப்பார்களாக!

ச. கந்தசாமி
(ஓய்வுபெற்ற உப. அதிபர்)
சண்டிலிப்பாய்

## தோட்டத் தொழிலாளர் போராட்டத்திற்கு வரதர்அணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தோட்டத் தொழிலாளர்களின் 400 ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஈ. பி. ஆர். எல். எவ் வரதர் அணி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்தக்கணம் வரை இலங்கைக்கான அந்நிய செலாவணி வருமானத்தில் 50 வீதத்தை ஈட்டித்தருபவர்கள மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களே,

ஆனால் மின்சாரம் குடிநீர், போககுவரத்து, வீடமைப்பு போன்ற உள்ள கட்டமைப்பு வசதிகளில் மிகவும் பின்தங்கிய நிலையை கொண்டிருப்பவர்களும் இவர்களே

காலநதாழ்த்தாது மலையகத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## பிந்துனுவெவ படுகொலை சம்பவத்துடன் சிங்கள கட்சிகள் பலவும் தொடர்பு
### ஜனாதிபதி தகவல்

[கொழும்பு]

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம தாக்குதலின் பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சி சிஹல உறுமய, சிங்கள வீரவிதான ஆகிய அரசியல் அமைப்புக்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதென கடந்த புதனன்று ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தூக்குத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த புதனன்று நஷ்ட ஈடு வழங்கும் வைபவத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

[உ-9]

## தீப்பற்றி காயம்

பெற்றோலுக்கு அருகில் மோட்டார்சைக்கிள்பிளக்கை சூடாக்கியவர் பெற்றோல் தீப்பற்றிக் கொண்டதில் எரிகாயங்களுக்குஉள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் வடக்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த பரராசசிங்கம் (வயது 17) என்பவரே தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[உ-104]

## முரளிதரனின் பந்துவீச்சு இரகசியங்களை அம்பலப்படுத்திய அரவிந்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த முத்தையா முரளிதரனின் பந்துவீச்சை எவ்வாறு எதிர் கொள்வது அவர் பந்து வீசுகையில் எவ்வாறுநுட்பமாக ஆடுவதுஎன்பதுபற்றியஇரகசியங்களைஅதேஅணியைச் சேர்ந்த அரவிந்த டிசில்வா காடியன் பத்திரிகையில் கட்டுரையாக வரைந்துள்ளார்.

காடியன் பத்திரிகைக்கு அவர் வரைந்த கட்டுரையில் முரளியை பல இடங்களில் கேலி செய்திருப்பது இலங்கைகிரிக்கெட் இரசிகர்களிடம்பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் டெய்லிமிரர் பத்திரிகை இந்தக் கட்டுரையைமறுபிரசுரம்செய்திருப்பதும்குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தனது அணி வீரரின் விளையாட்டு நுட்பங்களை வெளியிட்டு அவரை கேலி செய்தமை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். [உ-9]

கள்வர் அரக்கத்தனம்

## தனித்திருந்த பெண்ணின் வாயைக் கிழித்தனர்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனித்திருந்த பெண்மணியை கத்தியால் காயப்படுத்திவிட்டு, பெறுமதி மிக்க தங்க நகைகளை களவாடிச் சென்றுள்ள சம்பவம் அரியாலைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இரவு 8 30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சுப்பிரமணியம் கேசவராணி (வயது-48) என்பவரே சத்தியால் வாய் கிழிக்கப்பட்டு வயிற்றிலும் சத்தி வெட்டுக்கு இலக்காகிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது திருட்டு முயற்சிக்கு மேற்படி பெண்மணி தடையாய் இருந்த காரணத்தினாலேயே சத்தம் போட முடியாதவாறு வாயைக் கத்தியால் கிழித்ததாக கூறப்படுகிறது. (உ-12)

பிந்துனுவெவ படுகொலையில்

## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு 2 லட்சம் ரூபா

[கொழும்பு]

பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு நிலையத்தில் படுகொலை செய்யப்பட்ட பத்தொன்பது பேரின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டது.

நஷ்டஈட்டுத் தொகையாக 2 இலட்சம் ரூபாவும் மரணச் சடங்கு செலவுகளிற்காக பத்தாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இவர்களுக்குரிய நஷ்டஈடாக 50 ஆயிரம் ரூபாவழங்கப்படவிருந்த போதும் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலேயே நஷ்டஈட்டுத் தொகை 2 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. (செ)

## வளலாய், கதிரிப்பாய் மக்களுக்கு மின். இல்லை

(ஆவரங்கால்)

வளலாய். கதிரிப்பாய். வரண் ஆகிய கிராமங்களுக்கு இன்னமும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அடிக்கடி இடம்பெயர்ந்து மீளக்குடியேறி வரும் இக்கிராமங்களைச்சேர்ந்த வீடுகளுக்கு 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்து மின்சாரம் பாவனைக்கு விண்ணபித்தும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

ஆனால் தங்களுடன் விண்ணபித்த இடைக்காடு கிராம வீடுகளுக்கு சந்நிதி வீதியிலிருந்து கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்வரையிலான வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமது கிராமத்திதிற்கு இன்னமும் வழங்கவில்லை என அம்மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (செ-7-57)

## திருத்தஞ்செய்யாதவீதிகள் பொது மக்கள் சிரமம்

(ஆவரங்கால்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வீதியுடன் இணையும் கதிரிப்பாய் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தஞ் செய்யப்படாது குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றது.

கதிரிப்பாய், வரண் ஆகிய இடங்களைச்சேர்ந்த விவசாயிகள், தங்களது உற்பத்தி பொருட்களை துவிச்சக்கர வண்டிகளில் கூட எடுத்துச் செல்ல முடியாது பெருஞ் சிரமத்தை எதிர் நோக்கி வருகிறார்கள்.

அத்துடன் பொது மக்களும் இவ் வீதியால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளைகதிரிப்பாய் சிறிமுருகன் சனசமூகநிலையவீதி, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு செல்லும் வீதி, முரசொலி சனசமூக நிலைய வீதி ஆகிய வீதிகளும் திருத்தமின்றியே காணப்படுகின்றது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காமையை இட்டு பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (செ-57)


## க. பொ. த. உயர் தரமாணவர்களுக்கான உயிரியல் பாட வினாக்கள் -04

### ஆசிரியர் : கே. சுகந்தன் B. Sc

#### மாதிரி அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**வினா I**

கீழே தரப்பட்டுள்ளது விலங்குகளை இனம்காணப் பயன்படுத்தும் இருகிளைச்சாவியின் ஓர் பகுதியாகும். பொருத்தமான பெயரை அல்லது அடுத்துவரக்கூடிய இலக்கத்தையிட்டு சாவியை பூரணப்படுத்துக.



1. Prawn
2. Earthworm
3. Centipede
4. Starfish
5. Hydra
6. Cuttle Fish

விலங்கின் பெயர் அல்லது அடுத்து வரும் இலக்கம்

1) ஐயாரைச் சமச்சீரைக் காட்டும்
   ஐயாரைச் சமச்சீரைக் காட்டாது.
2) ஆரைச்சமச்சீரைக் காட்டும்
   ஆரைச்சமச்சீரைக் காட்டுவதில்லை
3) மூட்டுப் பாதம் உண்டு
   மூட்டுப் பாதம் இல்லை
4) இரண்டு சோடி உணர் கொம்பு உண்டு
   ஒரு சோடி உணர் கொம்பு உண்டு
5) கண்கள் உண்டு
   கண்கள் இல்லை

### வினா இல -01 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | 5 | 2 | 2 |
| 3) | 3 | 4) | 2 |
| 5) | All | 6) | 1 |
| 7) | 4 | 8) | 3 |
| 9) | 2 | 10) | 1 |

### வினா இல -02 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | 4 | 2) | 3 |
| 3) | 5 | 4) | 2 |
| 5) | 5 | 6) | 4 |
| 7) | 2 | 8) | 4 |
| 9) | 2 | 10) | 3 |
| 11) | 2 | 12) | 2 |
| 13. | 4 | 14) | 3 |
| 15) | 2 | | |

1) காலங்கள்
2) சகாப்தம்
3) சயனோபக்ரீறியா
4) Eubacteria
5) அக ஒன்றிய வாழ்வுக் கொள்கை
6) இழைமணி
7) பச்சய உருமணி
8) Chordata
9) Ostracoderm
10) பச்சை அல்கா
11) Carboniferous
12) Chitin
13) செதில
14) Tertiary
15) Order-primate
16) Chordata
17) முதுகுநாண்
18) முதுகுநாண்
19) Amphibia
20) Protozoa

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## இன்று ஆரம்பம்

(மந்திகை)

வடமராட்சிவடக்குபிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும்நாளையும்பரு.துறை ஹாட்லிக்கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும். (உ-23

தீவக வலயமட்ட விளையாட்டுப்

## போட்டிகளில் பங்குபெறும் அணிகள் தெரிவாகின

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கானவிளையாட்டுப் போட்டிகள் அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கோட்டக்கல்வி அதிகாரி க. இரத்தினசிங்கம் தலைமையில் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ் எல். லோகநாதன் நெறிப்படுத்தலில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், தீவகவலய மட்டப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான அணித்தெரிவும் இடம்பெற்றது.

பெண்களுக்கான 15 வயது பிரிவில் வலைப்பந்தாட்டப் போட்டியில் யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி யா/கலாநிதி ஆ தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அணியும், பெண்களுக்கான 17 வயது பிரிவில் யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி யா/கரம் பொன் சிறிய புஸ்பமகளிர் மகாவித்தியாலய அணியும், பெண்களுக்கான 19 வயது பிரிவில் யா/காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் யா/கரம் பொன் சிறிய புஸ்பமகளிர் மகாவித்தியாலய அணியும் தெரிவுசெய்யப்பட்டன.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் பங்குபற்றுவதற்காக 17 வயது பிரிவில் யா/புனித அந்தோனியார் கல்லூரி யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அணியும், 19 வயது பிரிவில் யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அணியும்தெரிவுசெய்யப்பட்டன.

ஆண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி யா/காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அணியும் தெரிவுசெய்யப்பட்டன. உ75

## பிரதேச செயலகத்தில் பயண அனுமதியை பார்வையிடலாம்

(ஆவரங்கால்)

வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான அனுமதியை இனிமேல் பிரதேச செயலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் இருந்து இம்முறை நடைமுறைக்கு வருவதால் இனிமேல் பயண அனுமதியை உறுதிப்படுத்த யாழ்ப்பாணம் செல்லும் அலைச்சல் இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பிரதேச மக்களின் நலன் கருதி பயண அனுமதி விண்ணப்பப்படிவங்களும் இங்கு வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி பயண அனுமதி விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-57)

மின் விநியோகம்

## இல்லை

(யாழ்ப்பாணம்)

யா.சுண்டுக்குளி தபாலகத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (உ-12)

யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# பயன்பெற வாழ்ந்துகாட்டு

நம்முடைய பிறவியின் பயனே நன்கு வாழ்ந்து காட்டுவது தான். வாழ்க்கையைப் புண்ணியச் செயல்கள் நிறைந்ததாக ஆக்கிக் கொள்வது தான்என்கிறார் டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன், அவர் கூறுவதாவது; நம்முடைய பிறப்பும், நம்முடைய வாழ்க்கையும் முற்பிறவியின் பயனால் ஏற்படுகிறது என்பது உண்மை. இதை நம்மால் தேர்ந்தெடுக்க முடியாது. மிருகங்களாகப் பிறப்பவையும் கூட நல்ல ஆத்மாக்களாக இருந்தால், பசுக்களாக பிறந்து பூஜிக்கப் படுகின்றன.

அதேபோல் நல்ல ஆத்மாக்கள் எளிய குடும்பத்தில் பிறந்தாலும், உலகம் போற்றும் உத்தமர்களாக உயர்ந்து விடுவார்கள் அவர்களுக்கு இந்த உலக வாழ்க்கையின் வசதிகளிலோ, இன்பங்களிலோ நாட்டமில்லை. ஆகையால் அவை அவர்களைப் பாதிப்பதில்லை. இந்த எல்லைகளுக்குள் வைத்துக் கொண்டு பார்த்தால் பிறந்த பிறகு நாம் வாழும் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது நமக்குப் புலனாகும்.

வாழ்க்கையே ஒரு சீட்டாட்டத்தைப் போன்றது தான். நமக்குக் கிடைத்த சீட்டுக்களை வைத்துக் கொண்டு, நம்முடைய திறமைக்கேற்ப ஆடி வெற்றிபெற முயலலாம். அதேபோல் நாம் எந்தக் குடியில்பிறந்திருந்தாலும், எந்தத் தேசம் எந்தச் சூழ் நிலையில் பிறந்திருந்தாலும். இந்தப்பிறவியை நன்கு வாழ்ந்து காட்டுவதன் மூலம் நற்பயன்களை இப் பிறவியிலும் பெறலாம். அடுத்த பிறவியிலும் பெற வழிதேடிக் கொளளலாம்.

மிருகங்களுக்கு இப்படி வாழும் முறையைத் தேர்ந்தெடுக்கும் சக்திகிடையாது. ஆனால் மனிதனுக்கோ இதற்குரிய பகுத்தறிவு உண்டு. தன்னுடைய இச்சைகளுக்கு மட்டும் இடங்கொடுத்து வாழ்பவன் மனிதனாகப் பிறந்தாலும், சமூகத்திற்கும் பிறருக்கும் கெடுதிகளைச் செய்கிறான். இதையே பாவம் என்கிறார்கள். பகுத்தறிவைப்பயன்படுத்தி தனக்குத் துன்பம் ஏற்பட்டாலும், சமூகத்துக்கும் பிறருக்கும் நன்மைகளைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். இதையே புண்ணியம் என்கிறோம். இந்த இரண்டு செயல்களுக்குமே நாம்இந்தப் பிறவியிலும், அடுத்த பிறவியிலும் பதில் சொல்லியே ஆக வேண்டும். இதிலிருந்து எவரும் தப்ப முடியாது

**க.க. இராமலிங்கம்**

# சமூக நலன் பேணல் தொடர்பான பொதுவான கலந்துரையாடல்

## கியூடெக் நிறுவனத்தில்

(ஈச்சமோட்டை)

சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளை துரிதமாகவும் திருப்திகரமாகவும் முன்னெடுப்பதற்காக சமூக நலன் பேணும் அமைப்புக்களுக்கான பொது ஒன்று கூடல் இன்று பி.ப 3.00 மணிக்கு கியூடெக் நிறுவன பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இதில் பல சமூகமய செயற்திட்டங்கள் முன்னெடுப்பது பற்றிய பொதுவான கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன

இளையோரை புகைத்தல் மற்றும் மது போதைக்கு அடிமையாகாது காத்தலும் அவர்கள் மூலம் அதற்கான பிரசாரத்திட்டங்களை மேற்கொள்ளல்.

குடும்பத் தலைவர்களை பொறுப்புள்ள முன் மாதிரிகளாக நடக்க ஏற்ற விழிப்புணர்வூட்டலும் குடும்ப உறவை பலப்படுத்தலும்.

மற்றும் பொது இடங்களில் மது விற்றல், புகைத்தல் ஆகியவற்றை சட்டப்படி தடுத்தல்.

கசிப்பு தயாரிப்பு இல்லங்கள், மையங்களை நடத்துபவர்களை மாற்றுத் தொழில் முயற்சிக்கு வழி காட்டி மறுவாழ்வுக்கு வழி காட்டுதல்.

இது தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள் தெருக்கூத்துக்களை மக்களிடையே நடத்தல்.

இவ் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு சமூக மட்டத்தில் உற்சாகம் வழங்குதல் போன்றசெயற்றிட்ட ஆராய்வுகள் இன்றைய தின ஒன்று கூடலில் இடம் பெறும்.

(உ-59)

## சேவைக்கால பயிற்சி

(மந்துவில்)

தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் தரம் 7 வரலாறும் சமூகக்கல்வியும், தரம் 9 தமிழ் தரம் 6 சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி இன்றும் தரம் 10 நடனம் 1 தரம் 9 சித்திரம் தரம் 6 சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நாளையும் தரம் 7 விஞ்ஞானம், தரம் 6, 7சங்கீதம்ஆகியவற்றுக்கான சேவைக்காலப் பயிற்சி 6 ஆம் திகதியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். [உ-39]

## விபத்தில் காயம்

(மந்திகை)

யாக்கரு சோதனைச் சாவடிக்கு அண்மையில் உழவு இயந்திரம் ஒன்றுதடம் புரண்டதில் அதில் பயணம் செய்த ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் வடக்கைச்சேர்ந்த வேலும்மயிலும் நந்தகுமார் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார். (உ-23)

## பேருந்து நிலையம் இல்லை

(சங்கானை)

வலி தென்மேற்கு பிரதேச சபையை நகரசபையாக மாற்றுவதில் தாமதம் ஏற்படலாம் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் பேருந்து நிலையம் ஒன்றினை அமைப்பதற்குரிய காணியைத் தெரிவு செய்வதில் காணப்படும் முட்டுக் கட்டை நிலைகளே இத் தாமதத்திற்கு காரணம் என கூறப்படுகிறது.

(உ-123)

## மெய்வன்மைப் போட்டி

(மந்துவில்)

யா. வரணி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை 4 ஆம் திகதி பாடசாலை அதிபர் நவரட்ணராஜா தலைமையில் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (உ-39)

## விளையாட்டு உபகரணங்கள்

(சங்கானை)

வலி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வேண்டிய விளையாட்டு உபகரணங்களை வழங்க சம்பந்தப்பட்ட பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி உதவியைப் பெற விரும்பும் சனசமூக நிலையங்கள் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-123)

## பொருட்களை இறக்கிய தொழிலாளி படுகாயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்கு துறையில், பொல்கொட் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்தசமயம் கப்பலில்பொருத்தப் பட்டிருந்த கதவு தவறுதலாக வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறை ச்சந்தை மேற்கைச் சேர்ந்த சிவகுரு விஜயகுமார் என்பவரே படுகாயமடைந்துள்ளார். [உ-23]

## சண் நிறுவனத்தினால் சுயதொழில்முயற்சிக்கடன்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் கடந்த வருட இறுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'சண்' நிறுவனம் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

இதில் மந்திகை, பொலிகண்டி, கரவெட்டி, குருநகர் ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதியில் போர் மற்றும் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு கோழிவளர்ப்பு, சிற்றுண்டி தயாரிப்பு, விவசாயம், கடற்றொழில் வியாபாரம்போன்ற முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-59)

## உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான செயலமர்வு 5ஆம் திகதி

[மந்திகை]

ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கானசெயலமர்வு வரும் 5ஆம் திகதிதிங்கட்கிழமை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இச் செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப பணிப்பாளர்களை வலய மட்டத்திலுள்ள முன்பளளி பாடசாலைகளின் விபரங்கள் மாணவர் தொகை, ஆசிரியர் எண்ணிக்கை முன்பள்ளிகளை நடத்துமநிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுளள முன்பள்ளிகளின் விபரங்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(உ-23)

## பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய கிளை வசதிகுறைந்தநிலையில்

(யாழ்ப்பாணம்)

பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகம் வசதிகள் குறைந்த நிலையில் இயங்கிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேறபடி அலுவலகத்திற்கு போதிய தளபாட வசதிகள் இல்லாதிருப்பதாகவும் போதிய இடவசதிகள் இன்றி கஷ்டப்படுவதாகவும்பணியாளர்கள் தெரிவித்தனர்.

இது தவிர பணியாளர்களதுதுவிச்சக்கர வண்டிகள் மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்குரிய பாதுகாப்பான இடம் ஏற்பாடு செய்து கொடுக்கப்படாததுடன் அங்கு அலுவல்கள் நிமித்தம் செல்பவர்களும் தமது வாகனங்களை நிறுத்த உரியஇடமின்றியிருப்பதாக கூறப்படுகிறது.

மேற்படி விடயங்கள் தொடர்பாக உரியவர்களுக்கு பலதடவைகள் சுட்டிக்காட்டிய போதும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும்எடுக்கப்படவில்லை. (உ-12)

## பிரதேச செயலகங்களிடையே விளையாட்டு போட்டிகள் இடம்பெறும் தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள தினங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மாத 7,8 ஆம் திகதிகளில் - எல்லே 17, 18 ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டம் 21 ஆம் திகதி-உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகள் யா/ துரையப்பா விளையாட்டரங்கில்இடம்பெறவுள்ளன.

15,16 ஆம் திகதிகளில் கரப்பந்தாட்டப் போட்டி தெல்லிப்பளை ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கிலும் 24, 25 ஆம் திகதிகளில் கபடிப் போட்டி ஊர்காவற்றுறையிலும்.

இம்மாதம் 31 ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் முதலாம் திகதி - மென்பந்து கிரிகெட் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன், கொக்கி, மல்யுத்தம், பாரம் தூக்குதல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (உ-2-6)

## விவசாய டிப்ளோமா கற்கைநெறி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விவசாய கல்லூரிகளில் விவசாயத்தில் டிப்ளோமா கற்கைநெறி 2001/2003 இற்கான அனுமதிக்குரிய நேர்முகப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 16. 9. 2000 அன்று நடைபெற்ற மேற்படிகற்கைநெறிக்கான எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றிய 26 மாணவர்களது தகைமைச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப்பரீட்சை திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் இம்மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளதால் கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை அன்றையதினம் சமுகமளிக்குமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை அறிவித்துள்ளார்.

எஸ். சுதர்ஜன் சித்திரமேழி இளவாலை, கே. செல்வி 50 சப்பல்வீதியாழ்ப்பாணம், எஸ். பார்த்தீபன் 224/14பிறவுண்வீதி யாழ்ப்பாணம், கே. தேன்மொழி மே/பா அன்னராஜேந்திரன் ஏழாலை மேற்கு, எஸ். அகிலன் நீலகிரி சாவகச்சேரி, ஆர். யாழினி 427/4 ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம், எஸ். கார்மேகவண்ணன் பிலா அடைப்பு புலோலி தெற்கு மயூரா பத்மநாதன் 31/5 புதுவீதி அத்தியடி யாழ்ப்பாணம், பி நக்கீரன் தம்பியோடை வதிரி கரவெட்டி, கே. செந்தூரன் சுதுமலை தெற்கு ஆனைக் கோட்டை, வி. சுகன்யா சுழிபுரம் மத்தி சுழிபுரம், பி. இளமயூரன் ஆனந்தவாசம் மஞ்சத்தடி தெற்கு இணுவில்,

ஜே. தாரிணி 74/2 அரசடி ஒழுங்கை யாழ்ப்பாணம, செல்வி. நடேசலிங்கம் அரசடிவீதி சங்கானை, கவிதா விநாசித்தம்பி 320 பலாலி வீதி திருநெல்வேலி, அனோஜா பரமகுரு அச்சுவேலி தெற்கு, ஏ. தவச்செல்வி 126 பொற்பதிவீதி கொக்குவில், ஏ. சிவநந்தினி 70 கல்லூரி வீதி நீராவியடி யாழ்ப்பாணம், ஜி. ஜெகன் பருத்தித்துறை வீதி கோப்பாய் தெற்கு, வை. கீதன் 18/1 களுகந்தர்வீதி சுண்டுக்குழி, கே. கிரிஜா ஏ. வி. றோட் அரியாலை, ஏ. கந்தையன் கோவில்வீதி அரியாலை, எம். ஜே. கருணைநாயகம் சென்ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம், ஜி. அபிராமி 7 ஆம் கட்டை சங்கானை, ஏ. மார்க்கண்டு கே.கே எஸ் வீதி இணுவில் கிழக்கு, ரி. கௌரி கே. கே. எஸ். வீதி குளப்பிட்டி கொக்குவில்.

(உ)

உலக தரிசனம்

## இலங்கை அரச படைகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதை அமெரிக்கா சுட்டிக்காட்டு

(வாஷிங்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதல்களின் போது கடந்த காலங்களில் இலங்கை அரச படைகள் கடுமையான மனிதஉரிமைமீறல் சம்பவங்களில் ஈடுபட்டமை குறித்து உலக நாடுகளில் மனித உரிமை விவகாரம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட ஆண்டறிக்கையில் விபரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது,

அரசபடைகள், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மாற்றுத் தமிழ்க் குழுக்களை தூண்டிவிடுவதுடன், ஆயுதங்களை வழங்கி சுதந்திரமாகச் செயற்பட அனுமதியளித்திருப்பது மற்றும் ஜனநாயக செய்திப் பத்திரிகைகளுக்கு இலங்கை அரசு தணிக்கை விதிப்பது,

கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்படுவது, பல்வேறு சித்திர வதைகளுக்கும் ஆளாவது குறித்தும அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-9)

## புலிகள் தொடர்பாக பா.ம.க. தலைவரின் நிலைப்பாடு என்ன?

(புதுடில்லி)

அ. இ. அ. தி. மு. கவுடன் கூட்டுச சேர்ந்து கொண்ட பா.ம.க. தலைவர் ராமதாஸின் புலிகள் தொடர்பான போக்கு அண்மைக் காலமாக மாறிவருவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

அண்மையில் ஆனந்தவிகடன் வார ஏட்டிற்கு ராமதாஸ் அளித்த பேட்டியில் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எந்த வேலையும் இல்லை.

புலிகளை என்றுமே நாங்கள் ஆதரித்ததும் இல்லை. தமிழர் நலன்காக்க தனி நாடு அமைவதைத்தான் நாம் ஆதரிக்கின்றோம் என்று ராமதாஸ் கூறி இருப்பதாவது அவரின் விடுதலைப் புலிகள் தொடர்பான போக்கில் மாற்றம் அடைந்துள்ளதையே தெளிவாகக் காட்டுவதாக சுட்டிக் காட்டியுள்ளனர். [உ-9]

## 10 இலட்சம் யூதர்களுக்கு ஷரோன் அழைப்பு

(ஜெருசலேம்)

அடுத்த 10 ஆண்டுகளில் 10 இலட்சம் யூதர்களை இஸ்ரேலில் குடியேற்ற பிரதமர் ஷரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

2020 ஆம் ஆண்டளவில் உலகில் மிகப் பெரும் அளவிலான யூதர்களை இஸ்ரேல் கொண்டிருக்க வேண்டும் எனும் நோக்கில் அடுத்த 10 அல்லது 12 ஆண்டுகளுள் 10 லட்சம் யூதர்களை முன்னாள் சோவியத் யூனியன், ஆர்ஜண்டீனா, எதியோப்பியா, பிரேஸில், மெக்ஸிக்கோஆகிய நாடுகளில் இருந்து இஸ்ரேலில் குடியேற்ற வேண்டும் என ஷரோன் மேலும் கூறியுள்ளார். (உ-9)

## பிரதம நீதிபதியை ஓய்வு பெறுமாறு சிம்பாப்வே அரசுபணிப்பு

(ஹராரே)

சிம்பாப்வேயின் பிரதம நீதிபதி அந்தனிகுபேயினை ஓய்வு பெறுமாறு அரசாங்கம் பணித்ததை எதிர்த்து போராடப் போவதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

வெள்ளையர்களின் காணிகளை பறித்து கறுப்பர்களிடம் ஒப்படைக்கும் முகாபேயின் திட்டத்திற்கு எதிராக வெள்ளை இனத்தவரான அந்தனிகுப்பே பல தீர்ப்புக்களை வழங்கி இருப்பதாலேயே இவரை ஓய்வு பெற அரசு வற்புறுத்துகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

## இந்தியாவின் சுதந்திர போராட்ட வீரர் சிவராமன் காலமானார்

இந்தியாவின் பழம்பெரும் பத்திரிகையாளரும், சுதந்திரப் போராட்ட வீரனுமாகிய ஏ. என் சிவராமன் நேற்று முன்தினம் சென்னையில் காலமானார்.

50 வருடங்களுக்கு மேலாக ஏ. என். எஸ். என்னும் சிறப்புப் பெயரோடு தினமணி தமிழ் நாளேட்டின் ஆசிரியராக பணியாற்றி பத்திரிகை உலகின் விருட்சமாக திகழ்ந்த இவர் 96 வயதில் நேற்று காலமானார்.

கணக்கன் என்ற பெயரில்கட்டுரை எழுதி மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த இவர் 1988 ஆம்ஆண்டு பத்திரிகைத்துறைக்கு வழங்கும் ஆர். என கொயங்கா என்ற விருதினைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

### செய்திப்பரல்

★ இந்தோனேசியா ஜனாதிபதிஅப்துல் ரஹுமான் வாஹிட்பதவி விலக வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் படத்தை பிரேதப் பெட்டியில் எடுத்துச் சென்றுள்ளனர்.

★ மெக்சிக்கோவின் நகரில் நடைபெறும் உலக பொருளாதார அமையத்தின் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

★ அமெரிக்க காங்கிரஸின் இருசபைகளினதும் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதிஜோர்ஜ்டபிள்யூபுஷ் கடந்த செவ்வாயன்று உரையாற்றினார்

★ ஹஜ்கடமையை நிறைவேற்ற உலகெங்கிலும் இருந்துபலலட்சக்கணக்கான முஸ்லிம்கள்மக்கா சென்றுள்ளனர்.

★ போதைக் குற்றத்திற்காக அமெரிக்கர் ஒருவரைரஷ்யா கைதுசெய்துள்ளது. இந்த நபர் உளவு வேலையில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

★ கொங்கோ நகரான புவெட்டோவிலிருந்து ருவாண்டா படைகள் ஐ நா. அவதானிகட்கு இடமளித்து விட்டு வாபஸ் பெற ஆரம்பித்துள்ளன. (உ-9)

## சிலைகள் உடைப்பு

[காபூல்]

ஆப்கான் தலிபானியர்களால் கடந்த வியாழக்கிழமை பழமை வாய்ந்த புத்தர் சிலைகளை உடைத்துள்ளனர். (செ)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல. 7 பரிசு பெறுவோர் விபரம்

**1 ஆம் பரிசு**

கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

மேரி நிஷாந்தினி ஜேக்கப்
19/02, 2 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்.

**3 ஆம் பரிசு**

ஆனந்தம் யசோதன்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

**அதிக புள்ளிகளைப் பெற்று பாராட்டுப் பெறுவோர்**

★ சர்வேஸ்வரன் அபிராமி
சிவன் வீதி, திருநெல்வேலி.

★ பாலசிங்கம் லக்ஷ்மன்
தோப்பு, அச்சுவேலி.

★ இலஷ்சுமணன் புஸ்பமணி
கோயில் வீதி, மல்லாகம்,

★ யேக்கப் பிறேமகாந்தன்
19/2, 2 ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்.

★ உ. மேரி
42/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஒலிவியா சாந்தி அருளானந்தம்
17, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

★ செ. அருட்குமரன்
பிரதேச செயலகம்,
நல்லூர்.

★ நவரட்ணம் இலட்மிகாந்தன்
''குமரன் ஸ்ரோர்ஸ்''
கரணவாய் கிழக்கு

★ சு. குகதாசன்
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

★ வடிவேலு வரதராசா
கோயில் வீதி,
மல்லாகம்,

பாராட்டுப் பெறுவோரின் மிகுதிப் பெயர்கள் நாளைய வலம்புரியில் தொடரும்.

## போதைப்பொருள் கடத்திவர பயன்பட்ட பாதை கண்டுபிடிப்பு

### பெருந்தொகை கொக்கெயின் மீட்பு

(வாஷிங்டன்)

மெக்ஸிக்கோவில் இருந்து போதைப் பொருட்களை கடத்தப் பயன்படுத்தப்பட்ட இரகசிய சுரங்கப்பாதை ஒன்று மெக்ஸிக்கோ- அமெரிக்கஎல்லையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச் சுரங்கப்பாதையினூடாக அதிகளவு போதைப் பொருள் கடத்தப்பட்டு வந்துள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இச்சுரங்கப்பாதை முடிவுறும் இடத்தில் அமைக்கப் பட்டிருந்த வீடொன்றில் இருந்து 840 இறாத்தல் எடை கொண்ட கொக்கெயின் போதைப்பொருளினை அமெரிக்க சுரங்கப் பகுதியினர் கைப்பற்றியுள்ளார்கள். (உ-9)

## உலக தரிசனம்-7 விடைகள்

1. மத்திய சீனாவில்
2. றாப்ஷனில்
3. 1986
4. அல்கோர்
5. அல்கா
6. எஸ்ராடா
7. ஜனவரி 20
8. அவுஸ்திரேலியா
9. ஜோசேப் கபிலா
10. சிங்கப்பூர்
11. இந்தியா
12. இந்தியா கல்கத்தா/ குல்கத்தா
13. லின்டா
14. அவுஸ்திரேலியா
15. சிசிலித் தீவில்
16. ஜோன் கூப்பர்
17. 6.1.2001
18. 250 மில்லியன்
19. குஜராத்-இந்தியா
20. சீனா
21. கும்பமேளா நீராடல் திருவிழா
22. லதா மங்கேஸ்கார்பிஸ் மில்லாக் ஹான்
23. ஜனவரி 26
24. டோக்கியோ
25. 'பைட்' உலக செஸ் சம்பியன்சிப் போட்டி

## சவூதி இளவரசிக்கு சிறைத் தண்டனை

(றியாத்)

பன்னிரெண்டு லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான தங்க நகைகளைக் கொள்வனவு செய்து அதற்கான பணத்தினை செலுத்தத் தவறிய சவூதி அரேபிய இளவரசி ஒருவருக்கு மூன்று வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இளவரசியின் நெருங்கிய தோழியான லெபனான் நாட்டு பெண் ஒருவருக்கும், அவரின் செயலாளருக்கும் முறையே 3, 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இம் மூவரும் நாட்டை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## தீவிரவாத அமைப்புக்கு நிதி சேகரித்தவர் கைது

(தெஹ்ரான்)

ஈரானிய முஜாகுதீன் தீவிரவாத அமைப்புக்கு நிதி சேகரித்த 7 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பெண் எனவும் சம்பந்தப்பட்ட 7 பேருக்கும் 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வசமிருந்த 10 ஆயிரம் டொலருக்கு அதிகமான நிதி பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. (உ-8)

உடம்பாடு இலாதவர் வாழ்க்கைகுடங்கருள் பாம்போடு உடனுறைந் தற்று

- குறள்

வலம்புரி

## மீண்டும் முருங்கையில்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடை செய்தமை குறித்து பலதரப்பட்ட வாதப்பிரதி வாதங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் இதுவரை காலமும் பேசாதிருந்த ஐக்கிய தேசியக் கட்சி பிரிட்டன் புலிகளைதடை செய்ததை வரவேற்றுள்ளது.

கொழும்பு மாநகரில்பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்திய ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை விரும்புவது போல் காட்டிக் கொண்டது. ஆனால் பிரிட்டன் புலிகளைத் தடை செய்த கையோடு அதனைவரவேற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னான்டோ ஐக்கிய தேசியக் கட்சியின் வரவேற்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இருக்கும் வரை இருந்துவிட்டு புலிகள் அமைப்பை பிரிட்டன் தடை செய்ததை வரவேற்றதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் மௌனம் கலைந்து விட்டது. விக்கிரமாதித்தனின் தோளிலிருந்துகேட்ட கேள்விக்கு சரியான பதில் கிடைத்தவுடன் பாய்ந்து முருங்கையில் ஏறியது போல் ஐக்கிய தேசியக் கட்சியும் சரியான தருணத்தில் இனம் இனத்தோடுஎன்பதை நிரூபித்து விட்டது.

அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிககாமல் பாராளுமன்றிலிருந்து வெளிநடப்புச் செய்வதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையை உணர்ந்து கொள்ள முடியும்.

புலிகள் விடயத்தில் தென்னிலங்கையிலுள்ள அத்தனை பேரினவாதக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து பிரிட்டன் மீது அழுத்தம் கொடுத்து சாதித்து விட்டோம் பார் என்று உவகை கொள்ள, தமிழினம் மட்டும் ஒற்றுமையின்றி இருப்பது நம்மினத்துக்கு நாம் செய்யும் துரோகமாகும் எனவே வருங் கால தமிழினத்தின் நன்மை கருதியாவது நாமெல்லாம் ஒன்று சேர்வது இனத்தின் விடிவுக்கு இன்றியமையாததாகும்.

# நாட்டுக்குப் பிரச்சினையை மட்டும் தாருங்கள்

# எந்தத் தீர்வும் வேண்டாம் என்கின்றனரா?

இது நம் நாட்டுப் பிரச்சினை இதற்கு வெளிநாடுகள் தீர்வு தரத் தேவையில்லை. இலங்கைப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை. தமது நாட்டு நலன்களைக் கருதி எமது நாட்டில் தலையிடுகிறார்கள். எமது நாட்டு இனப்பிரச்சினைக்கு வெளிநாடுகளில் தீர்வு வேண்டாம். இவ்வாறு நாட்டில் பெரும் ஒப்பாரி நடைபெறுகிறது. பெரும் தேசியவாதிகள் போலவும், எதற்குமே பிறநாடுகளில் தங்கியிராது சுய தேவைகளையெல்லாம் சுயமுயற்சியால் பெற்று வாழும் ஒரு பெருமை மிகு நாட்டின் குடிமக்கள் போலவும், உலகின் எந்தவொரு நாட்டிற்கும் நிகரற்ற விஞ்ஞான, மருத்துவ, தொழில் நுட்ப முன்னேற்றங்களுடனும், முதற்தரமானதும், முன்னோடியானதுமான நல்லாட்சி நடைமுறைகளுள் ஒரு நாட்டில் வாழ்பவர்கள் போன்ற நிலையில் நின்று சிங்களக் கட்சிகள் பலவும் இப் பொருட்காட்சி கண்டு புலம்புகின்றன. அரசும் அரசசார்பு ஊடகங்களும் எடுத்துக் காட்டாக செயற்பட்டாலும், முன்னணியில் நிற்பவை இரண்டு கட்சிகள் ஒன்று சிஹல உறுமய மற்றது மக்கள் விடுதலை முன்னணி சிங்கள ஜாதிக சங்கமயவையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

### தேசிய உணர்வா?

திறந்த பொருளாதார அமைப்பை ஏற்றுக் கொண்டும், உலக மயமாக்கலின் அசுரவேக வளர்ச்சிக்குள் தவிர்க்க முடியாதபடி அகப்பட்டுக் கொண்டும், குடிக்கும் நீரிலிருந்து வெடிக்கும் குண்டுவரை யாவற்றையுமே பிறநாடுகளிலிருந்து பெற்றுப் பயன்படுத்தி வாழ்ந்து கொண்டும், அதாவது எமது நாட்டிற்கு மட்டுமேயுரிய விவகாரம் எதுவுமேயில்லை என்னும் எல்லைவரை ஏகாதிபத்தியங்களினால் அடித்துச் செல்லும் வேகத்தில் திடீரென தேசிய உணர்வு தோன்றி, 'இனப்பிரச்சினை எம்முடையது. அதற்கு வேறு யாரும் சொந்தம் கொண்டாடக் கூடாது என்று அடம்பிடிக்கும் போக்கில் இவ்வாறான பிரச்சாரங்கள் இடம்பெறுகின்றன. உண்மையில் இவர்கள் இனப்பிரச்சினை எம்முடையது என்று அடம்பிடிப்பது சரியே. இதனைத் தொடக்கி வைத்தவர்கள் ஆங்கிலேயரே என்ற தமிழ்த்தரப்பு வாதத்திலுள்ள உண்மை தவிர ஏனைய பகுதிக்கு இவர்கள் உரிமைகோரலாம்.

மரவள் [illegible] டாம். கோதுமை மாவை உண்ணுங்கள். உணவை இப்படித்தான்உண்ண வேண்டும் என்கின்றன. நடத்தைப் போக்குஇப்படியிருக்க வேண்டும் என்கின்றன. அதன் வழியே பிணிகளும் கூட வெளிநாடுகளிலிருந்து தரப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து அவற்றிற்கான மருந்துகளையும் தருகின்றன. கல்வியை போதிக்கும் வழிமுறைகளைத் தருகின்றன. இன்ன கல்வியை கற்பித்தல் வேண்டும் என்கின்றன. கற்றபின் தம் நாட்டிற்கு அழைத்து தொழில் வாய்ப்புத் தருகின்றன. முதலீடுகளை வெளிநாடுகள் செய்கின்றன. உற்பத்தியை எடுத்துச் செல்கின்றன. எந்தெந்தத்துறைகளை எப்படியெப்படி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்

**யூகி**

தல் தருகின்றன. மீறி நடந்தால் அடுத்த தடவை கடன் இல்லை என்று தண்டிக்கின்றன. இன்னவிதமான சட்டங்களை இயற்றுங்கள் என்கின்றன. ஆலோசனை வழங்கும் குழுக்களை அனுப்புகின்றன. முன்னேற்றங்களை கவனிக்கும் அதிகாரிகள் வருகிறார்கள். டொலரும், ஸ்ரேளிங் பவுணும் உள்நாட்டு நாணயம் போல் உலவுகிறது. இலங்கை வங்கிகளில் வெளிநாட்டு நாணயங்களில் இலங்கையர் கணக்கு வைக்கிறார்கள். சண்டை பிடியுங்கள் நாம் ஆயுதங்கள் தருகின்றோம் என்கின்றன. சண்டையை தொடர விட்டு அடிக்கடி வந்து பார்த்து ஆலோசனை தருகின்றன. ஆட்களை அழைத்துச் சென்று வெளிநாடுகளில் பயிற்சி வழங்குகின்றன. குண்டுகளை வீசும் விமானங்களைக் கொடுக்கின்றன. கப்பல் கப்பலாக குண்டுகளையும் கொடுக்கின்றன. இரண்டாக இருந்த நாடுகளைஒன்றாக்கி சண்டையின் அத்திவாரத்தை இட்டவர்களும் அவர்களே?

### கோமாளிக்கூத்து

விவகாரங்கள இவ்வாறெல்லாமிருக்கும் நிலையில் முன்னைய அரசு போலவே ஆட்டுவிக்க ஆடும் அரசு வலிந்து கேட்டு சமாதானத் தரகர்களை அமர்த்தியிருக்கிறது. நியூயோர்க் நகர்வரையும் சென்று உலகவங்கி வாசலில் உண்ணாவிரதமிருந்து கோரிக்கை முன்வைக்கும் நிலைவரை சென்ற பின்னர் போரை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்தும் விடயமென்று வந்தவுடன் ஐயோ வெளியார் தலையிடுகிறார்கள் என்று அவலக்குரலெழுப்பி கோமாளிகள் போல் கூத்தாடி ஒப்பாரி வைப்பதன் பின்னணி என்ன? சிஹல உறுமயவின் சிந்தனையாளர்களினதும், மக்கள் விடுதலை முன்னணியின் விமோசகர்களினதும், அதிகார பீடத்தினரின் அட்டகாசங்களினதும் ஐ. தே. க. வின் மௌனத்தினதும் பின்னணி என்ன?

### புளகாங்கிதம்

உரிமைக் கோரிக்கையை முன்வைத்து, உள்நாட்டில் நடைபெற்ற ஆயுதவடிவிலான கெரில்லா போராட்டத்தை நசுக்குவதற்கு ஜெயவர்த்தன அரசு குண்டுவீச்சு விமானங்களை பயன்படுத்தியது. இதற்கு ஆரம்பத்தில் இந்தியா அதிருப்திதெரிவித்தது. தரையில் நின்று கெரில்லா போர்நடத்துபவர்கள் மீது குண்டுமாரி பொழிவது யுத்தமுமில்லை யுத்த தர்மமுமில்லை. கெரில்லாக்களை அழிக்கும் சாட்டில் இன அழிப்புத்தான் நடக்கிறது? என்று இனங்கண்டு கொண்டதாலேயே இந்தியா சமாதான நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுத்தது. முக்கியமான விடயமென்னவென்றால்அன்றைய சியாமாசெட்டி விமானங்களின் சிறிய ரகக் குண்டுகளுக்கே இந்த எதிர்ப்பு இருந்தது. ஆனால் உலகின் ஆயுத உற்பத்தியாளர்களினதும், உள்நாட்டு அரசியல் வாதிகளினதும் கைங்கரியங்களால் இன்று கிபிர் குண்டுவீச்சுக்கள், பல்குழல் பீரங்கிகள் வரை சாதாரணமாகவே யுத்தகளத்தில் பயன்படும் நிலை 'வெற்றிகரமாக' தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதாவது இவற்றை எந்தவொரு அரசினதும் எதிர்ப்புகள், அதிருப்திகள் பற்றிய பயமின்றி பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது சிங்கள இனவாதிகளுக்கு பெரும் புளகாங்கிதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஒரு அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியும், மேலும் பல மனித அழிவுக்குரிய ஆயுதங்களைப் பெற்றும் 'தமிழர் தாயகம்' என்னும் கோரிக்கைக்கு உறுதுணையாகவுள்ளஇன அடையாளங்களையும் அழிப்பதனால்ஒரே நாடு, ஒரே இனம், ஒரே மதம் என்ற நீண்டகாலக் கனவுகளையும் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று நம்புகிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக பல்வேறு கட்சிகளுக்குள்ளும் பிரிந்து நின்றாலும் சிங்கள இனவாதிகள் ஒரேவிதமாகச் சிந்திக்கின்றனர். ஆனால் பல்வேறு விதமாக நியாயங்களை இயற்றிப் பேசுகிறார்கள் எமது நாட்டில் இனப் பிரச்சினை கிடையாது. பயங்கரவாதப் பிரச்சினை தான் என்று கூறும் சிஹல உறுமய கட்சி இவ்விடயத்தில் தாம் ம. வி. முன்னணியின் கொள்கையை ஏற்பதாகவும் தெரிவித்துள்ளது. இதனையே சிஹல உறுமயவிலிருந்து பிரிந்து சென்ற சிங்கள ஜாதிக சங்கமயவும் கூறுகிறது. அரசாங்கம் எல். ரீ. ரீ. ஈ கூறுவதை நம்ப முடியாது. அவர்கள் சமாதானத்தின் நம்பிக்கையற்றவர்கள் என்கிறது. பௌத்த மதபீடங்களே இராணுவத் தீர்வு என்கின்றன. ஐ. தே. க. தான் மௌனம் அனுஷ்டிக்கப் போவதாக கூறுகிறது. தனது கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலே போதாதா? எனக் கேட்பது போலிருக்கிறது தமிழ் வாக்குகளை கைப்பற்றும் தென்னிலங்கைக் கட்சிகளின் கபடப்போக்கே இன்றைய இரத்தக்களரிக்கு காரணம் என்பதையும்இந் நேரத்தில் அவதானிக்கத் தவறலாகாது.

### மூக்குடைபட்டோர்]

சுருங்கக்கூறின்வெளிநாட்டு அரசியற் தத்துவங்கள, வெளிநாட்டுப் பணங்கள்: வெளிநாட்டு ஆலோசனைகள் என்பவற்றில் உயிர் வாழும் கட்சிகள் பிரிட்டனின் விவகாரங்களில் தலையிட்டு மூக்குடைபட்ட நிலையில் வெளிநாட்டு தலையீடு வேண்டாம் என்று கோருவதற்கான தூண்டுதலையும் கூட. வெளிநாடுகளின் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் வாயிலாகவே பெற்று முன்வைக்கின்றன. நோயும் தீரக் கூடாது ஆளும் சாகக் கூடாது என்பது இவர்களின் நிலைப்பாடு, இலட்சம் பேர் கொண்ட உலகின் நான்காவது பெரிய வேற்று நாட்டு இராணுவமே அரசினால் அழைக்கப்பட்டுவருடக்கணக்கில் இங்கு நிறுத்தப்பட்டும், போரிட்டும் திரும்பிச்சென்ற நிகழ்வை நினைவூட்டி பிரேமதாச மட்டும் தலையிடாமலிருந்தால் இன்று வரையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும் என்று இப்போதும் கூட இந்தத் தேசியவாதிகள் மத்தியிலிருந்து இடைக்கிடை குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இந் நிலையில்வெளிநாடுகளின் தலையீடு தான் வேண்டாமா? சமாதானம் வேண்டமா?

## தவக்காலச் சிந்தனை-4



தனது இலட்சிய வாழ்வில் தெளிவு கொண்ட இயேசு . . . விதவையின் மகனுக்கு மட்டுமன்று, லாசருக்கு மட்டுமன்று, நூற்றுவர் தலைவன் ஜேரஸின் மகளுக்கு மட்டுமன்று, வாழ்வில் பல பேருக்கு உயிரளித்துள்ளார். இன்றைய வாசகத்தில் இயேசு சுங்கத் துறையில் வரி வசூலித்துக் கொண்டிருந்த மத்தேயுவை அழைக்கிறார். சமுதாயத்தில் நடைப்பிணமாகக் கருதப்பட்ட மத்தேயுவின் நிலையை மாற்றி, தனது வாழ்வில் பங்கு தந்து புது வாழ்வளிக்கிறார். ''என்னைப் பின் செல்'' என்ற இயேசுவின் ஒரே வாக்கியம் இந்த வரி வசூலிப்பவருக்கு வாழ்வளித்தது. நமது குறுகிய புன்னகைகூட அயலானின் வாழ்வில் ஒளியேற்றலாம். நமது ஆறுதலான சில வார்த்தைகள் கூட பிறர் வாழ்வின் மருந்தாகலாம். கரங்களால் சிறிதே முதுகில் தட்டிக் கொடுப்பதால் அவன் மலையாய் உயரலாம். நாமும் இயேசுவாய் மாறலாம்.

காவலன்

**பயணிகளிடம்**

# பணம் பறிக்கும் கோஷ்டி கொழும்பில் அட்டகாசம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பும் பயணிகளிடம் ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பலின் அட்டகாசம் அதிகரித்துள்ளது:

இவ்வாறு பணம் பறிக்கும் மோசடியில் ஈடுபடுவோர், இலங்கை வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகள் போல் நடித்தே பயணிகளிடம் பணம் பறிக்கின்றனர்.

இது குறித்து பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று சென்றவர்கள் நாடுதிரும்பியவுடன் அவர்களது முகவரியை அறிந்து அவர்களது வீடுகளுக்கே சென்று பணம் பறித்துச் சென்றுவிடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(செ)

## ஒப்பந்தம் மீறல்

[கொழும்பு]

தலைமன்னாரில் இருந்து மூன்று கடல்மைல் தூரத்தில் உள்ள இலங்கைக் கடற்டரப்பில் சுமார் 50 இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்ததை இலங்கைக் கடற்படையினர் கடந்த 26 ஆம் திகதி அவதானித்திருப்பதாக விசேட ஊடகத்தகவல் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

[உ-9]

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

[கி-1540]

# இரு சபைகளிலும் அங்கீகாரம்இன்றி
# புலிகளைத் தடை செய்ய முடியாது

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிரதி நிதிகள் சபையிலும், பிரபுக்கள் சபையிலும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே இந்த இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பிரிட்டனில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பிரிட்டிஷ் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் புலிகள் இயக்கத்தையும் சர்வதேச பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாக உள்ளடக்கி வெளியிட்டுள்ள பயங்கரவாத இயக்கப்பட்டியலின் படி எப்போது இவ்வியக்கங்களுக்கெதிரான நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனக் கேட்டபோதே பிரிட்டிஷ் தூதர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ்சைப் போன்றே இலங்கையிலும் இக்கட்சி பற்றிய விவாதம் சபையில் இடம் பெறவேண்டும்.

இதற்கான கால அவகாசத்தினை திட்டமிட்டுக் குறிப்பிடமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பட்டியல் மீது இரு சபைகளும் விவாதித்து இருசபையும் இதனை அங்கீகரிக்கும் பட்சத்தில், பிரிட்டிஷ் உள்நாட்டு விவகார அமைச்சர் கையெழுத்திட்ட பின்னரே இத்தடை பிரிட்டிஷ்ஷில் அமுலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

[செ]

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்

**நியூ ராதிகாஸ் நகைமாளிகை**

189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/ 1543)

பிரிட்டன்.-.

கோரி பிரிட்டனுக்குச் செல்வது சாத்தியமாகாது என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன: [வ]

## தாயகம் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். தமிழ் எழுத்தாளர் ஒன்றியதேசிய கலை இலக்கியப் பேரவையின், தாயகம், 41வது இதழ் வெளியீடு இன்று சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் ந. சிவராஜாதலைமையில் இடம் பெறும் இவ் விளையாட்டு நிகழ்வில் யா/ செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் நா. சிவபாத சுந்தரம் முதன்மை விருந்தினராகவும் யா/ கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ இராஜகோபால் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ)

## இரு பெரும்புத்தர்சிலைகள் தகர்க்கப்பட்டன

(கொழும்பு)

பமியானிலுள்ள உலகப்புகழ்பெற்ற புத்தர் சிலைகள் இரண்டினையும் ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் இயக்கத்தினர் மோட்டார்மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி நேற்றுத் தகர்த்துள்ளனர். கடந்த சிலநாட்களுக்கு முன்பு தலிபான் அமைப்பின்தலைவர் முல்லா முகமட்உமர் நாடுமுழுவதிலுமுள்ள புத்தர்சிலைகளை அழிக்கப் போவதாக விடுத்தபகிரங்க அறிவிப்பைத் தொடர்ந்து இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது அதையும் மீறி 125அடி, 170அடி உயரங்களைக் கொண்ட இச் சிலைகள் தகர்க்கப்பட்டதையடுத்து சர்வதேசரீதியில் பலத்த கண்டனம் எழுந்துள்ளது. (ந-4)

## முடிவுத்திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம்15ந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரசஅதிபர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் அரசஅதிபர் யாழ் செயலகத்திற்கு அனுப்பிவைக்கமுடியும்.

(வ-வி)

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய சமூகஅபிவிருத்தி நிறுவனத்தினால் பட்டதாரி சமூகசேவையாளர் கற்கை நெறிக்கு விண்ணப்பம்கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விபரங்களுக்கு யாழ் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அரசஅதிபர் கேட்டுள்ளார்.

(வ-வி)

## அரசமுக்கியஸ்தர்களை ...

கொண்டுள்ள சமாதான முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்படாமல் பாதுகாப்பது நம்எல்லோரினது கடமை ஆகும்.

விடுதலைப் புலிகளுடன் நல்லெண்ணத்தை தற்போதய கால கட்டத்தில்பேண வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளைபிரித்தானியா தடை செய்திருப்பதால் இப்பாதிப்புகள் இருக்கின்ற போதிலும் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

எனினும் புலிகளின் முகத்தில் கரியைப்பூசுவதன் மூலம் உண்மையானசமாதானத்தை எட்டமுடியாது என்றும் மன்னார் ஆயர் தெரிவித்தார்

ஆயர்களின் கருத்துக்களை சேட்டறிந்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா இது பற்றி பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் உயர்மட்டக் குழுவினரிடம் தெரிவிப்பதாகக் கூறி ஆயர்களின் சமாதான முயற்சிகளை வரவேற்றுள்ளார். (வ)

## குளத்தில் மூழ்கி மரணம்

மாடு மேய்க்கச் சென்றவர் குளத்திற்கிரையான சம்பவம் கடந்த புதனன்று திருநெல்வேலி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பரவைக்குளத்திற்கு அண்மையில் மாடுமேய்த்துக் கொண்டிருந்த வேளை, திருநெல்வேலியை சேர்ந்த தளையசிங்கம் அழகரட்ணம் (வயது 75)என்பவரே மரணமடைந்தவராவர்.

நீண்ட நேரமாகி வீடுதிரும்பாமையை அடுத்து, தேடிச் சென்ற வேளை இவரது சடலம் குளத்தில்இருக்கக்காணப்பட்டது.

மரண விசாரணையை ரி ஜெயரட்ணம் மேற்கொண்டார். [உ-104]

நவீன வீடியோ மிக்சிங் கமறா மூலம் படப்பிடிப்புகள் செய்யவும் உள்புற ,வெளிப்புற படப்பிடிப்புகளுக்கும்

**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ரூடியோ**

23, மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.

(கி/1541)

## புலிகளை மாட்டேன்.

அதேவேளை புலிகளின் யுத்தநிறுத்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை புலிகளுடன் யுத்தநிறுத்தம் பல தடவைகள்செய்த அனுபவம் அரசுக்குண்டு.

விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தை மேசைக்கு வந்து அதில் நல்லதோர் முடிவை எடுத்து மக்களை மீளக்குடியமர்த்தும்விடயங்களை ஆராயலாம் என்றும் அதன் பின் தீர்க்கமான முடிவுக்கு அரசு வந்தால் இராணுவத்தை வாபஸ் செய்வது பற்றியும், புலிகள் ஆயுதம் கைவிடுவது பற்றியும் பேசப்படும் என்றும் கதிர்காமர் தெரிவித்தார்.

## குண்டுகள் மீட்பு

கைதடிப் பகுதியில் கடந்த 28 ஆம் திகதிபடையினர்மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 6 மோட்டார் குண்டுகள், கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல்நிலையம் தெரிவித்துள்ளது (உ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு நாகரெத்தினம்

யாழ்ப்பாணம் இல 81 மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த திருமதி முருகேசு நாகரெத்தினம் நேற்று (02-03-2001) வெள்ளிக்கிழமை இரவு காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும், திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம், காலஞ்சென்ற விஜயா, டாக்டர் கதிர்காமநாதன், (மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி), வரதராசா (சென்னை), பாலசுப்பிரமணியம் (கனடா), கணேசநாதன் (தென் ஆபிரிக்கா), லயன் பத்மநாதன் (யாழ். மருந்தகம், வெஸ்கோ பார்மஸி யாழ்ப்பாணம், கல்வியங்காடு, மந்திகை, யாழ் வைத்திய சாலை (தனியார்), ஆகியவற்றின் உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் திருமதி ஜெயாகணேசநாதன்(தென்னாபிரிக்கா) தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), சேனாதிராஜா (பிரான்ஸ்), பத்மாவதி, நாகேஸ்வரி, கமலா ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தன், லலிதா, சுயாத்தா (யாழ். மருத்துவ பீட மாணவி), மகேசன் (தென்னாபிரிக்கா), சுதாகர் (மருத்துவக் கல்லூரி மொஸ்கோ), சுரேஷ் (கனடா), பிரஸ்னா (மாணவி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), பிரவீன் (மாணவன் ஜோன் பொஸ்கோ வித். பிறின்ஸி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் [03-03-2001] இன்று சனிக்கிழமை இல. 81, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
லயன். K. M.
பத்மநாதன் (மகன்)
தலைவர் லயன்ஸ்கழகம்.
கொக்குவில்.
வெஸ்கோ பார்மஸி,
யாழ்ப்பாணம்.

81, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

[கி-1555]

"எங்கள் ஆசான்"

## திரு க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்களின் பவளவிழா அழைப்பிதழ்



இடம்:- யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமிமண்டபம்
கே. எஸ். சுப்பிரமணியம் அரங்கு

காலம்:- 04-03-2001 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2-00 மணி (இ நேரம்)

எங்களாசான் க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்களின் பவள விழாவில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆசான் அவர்களை வாழ்த்தி வளம் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- பவளவிழாக் குழுவினர் -

[கி/1550]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவரினது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.